# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 01.01.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல் ஹதீது -ன் 29 வது வசனத்தை ஓதினார்கள்:**

**யாஅய்யுஹல்லஸீன ஆமனுத்த(க்)குல்லாஹ வஆமினூ பிரஸுலிஹீ யுஃதி(க்)கும் கிஃப்லைனி மிர்ரஹ்ம(த்)திஹீ வயஜ்அல்ல(க்)கும் நூரன் (த்)தம்ஷுனபிஹீ வயஃ(ஒ)க்ஃபிர் ல(க்)கும். வல்லாஹு கஃபூருர் ரஹீம்** – நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சி அவனுடைய தூதரிடத்து நம்பிக்கை கொள்ளுங்கள். அப்பொழுது அவன் உங்களுக்குத் தன் கருணையிலிருந்து இரு பங்கை அளித்து, உங்களுக்கு ஓர் ஒளியை வழங்குவான். அதன் உதவியால் நீங்கள் நடப்பீர்கள். மேலும் அவன் உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (57:29)

இன்று அல்லாஹ்வின் அருளால் 2010 -ம் ஆண்டின் முதல் நாள் ஆகும். இந்த முதல் நாளை ஜுமுஆவின் நாளாகவும் அல்லாஹ் ஆக்கியிருக்கிறான். ஜுமுஆ நாள் ஒரு அருளுக்குரிய நாளாகும். எனவே உங்கள் எல்லாருக்கும் முதலில் நான் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா வகையிலும் எல்லா அஹ்மதிகளுக்கும் இவ்வருடமும், வரக்கூடிய ஒவ்வொரு வருடமும் அருளுக்குரியதாக ஆகிக் கொண்டே செல்லட்டுமாக.

ஒவ்வொரு வருடமும் நாம் ஒருவர் மற்றவருக்கு புத்தாண்டு வாழ்த்து தெரிவிக்கிறோம். ஆனால் ஒரு மூஃமினுக்கு அவரது தவ்பா (பாவமன்னிப்பு) ஒப்புக் கொள்ளக் காரணமாக அமைந்த நாளும், ஆண்டுமே வாழ்த்துக்குரிய நாளும் ஆண்டும் ஆகும். மேலும் அதுவே அவரது ஆன்மீக முன்னேற்றத்திற்கு காரணமாக அமைகின்றது. அவரது மக்ஃபிரத்திற்கு காரணமாக அமைகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

மனிதன் தவ்பா செய்யும் நாளே அவனுக்கு ஈத் உடைய நாளும், உண்மையான மகிழ்ச்சிக்குரிய நாளும் ஆகும். அந்த நாள் அவரது மன்னிப்பின் நாளாக இருக்கின்றது. அது மனிதனுக்கு ஆன்மீக முன்னேற்றத்திற்கான வழியைக் காட்டும் முதல் நாளாக இருக்கும்.

அந்நாளே அல்லாஹ்வின் உரிமையையும் அடியாரின் உரிமையையும் மனிதன் நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் ஏற்பட்ட நாளாக இருக்கும்.

அந்நாள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக மனிதன் தனது எல்லா ஆற்றல்களையும் வாயப்புகளையும் பயன்படுத்துவதன் பக்கம் கவனம் ஏற்பட்ட நாளாக இருக்கும்.

அந்நாள் இறை நெருக்கம் பெறுவதற்காக மனிதன் செயல்ரீதியாக முயற்சி செய்யும் நாளாக இருக்கும். நமது வருடமும் நாளும் நாம் களங்கமற்ற முறையில் இந்த இலக்குகளை அடைவதற்காக அல்லாஹ்விடம் உதவி கேட்டவாறு அவன் முன் குனியும் போதும், தமக்குள் தூய மாற்றம் ஏற்பட முயற்சி செய்யும் போதும்தான் அருளுக்குரியதாக ஆகும்.

நிச்சயமாக இன்று ஜுமுஆ உடைய நாள் அருளுக்குரிய நாட்களுள் ஒன்றுதான். எனவே இன்று புது வருடம் ஆரம்பிக்கின்றதென்றால் மிகவும் பரக்கத்திற்குரிய ஒரு நாளில் ஆரம்பித்துள்ளது என்று நாம் இந்த அடிப்படையில் தான் கூறுகிறோம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜுமுஆ நாளின் முக்கியத்துவம் குறித்து சில வழிகாட்டல்களை வழங்கியுள்ளார்கள். ஆனால் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த நாள்

மிகவும் அருளுக்குரிய நாளாக இருந்தபோதிலும் ஓர் உண்மையான மூஃமின் அதிலிருந்து பயன்பெறுவது போன்று மூஃமின் அல்லாதவர் பலன் பெற இயலாது. நாள் ஒன்றுதான். ஆனால் ஒரு மூஃமின் ஈடேற்றம் பெறுவதற்காக அந்நாளில் முயற்சி செய்கிறார். ஆனால் ஒரு மூஃமின் அல்லாதவர் இது வாரத்தில் ஏழு நாட்களில் ஒருநாள் என்று நினைக்கிறார். ஒரு மூஃமின் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய இந்த வழிகாட்டலை எப்போதும் கவனத்தில் கொள்கிறார். அது குறித்து ஹதீஸிலும் வருகிறது.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் மூலம் அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஜுமுஆவைப் பற்றி பேசினார்கள். அப்போது கூறினார்கள். இந்த நாளில் ஒரு குறிப்பிட்ட நேரம் வருகிறது. மனிதனுக்கு அந்த நேரம் கிடைத்து விட்டால் அவர் தொழுதவாறு என்ன துஆ கேட்டாலும் அது ஒப்புக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு கூறிவிட்டு கையால் மிகவும் சிறியது என்ற சைகை செய்தவாறு அந்த நேரம் மிகவும் குறுகியதாகும் என்று கூறினார்கள்.

ஒரு மூஃமின் அந்நாளில் தனது துஆவின் ஒப்புக் கொள்ளப்படுதலின் காட்சியை காண்கிறார். மூஃமின் அல்லாதவர் தனது சுகபோகங்களில் மூழ்கிக் கிடக்கிறார். வருடத்தின் முதல் நாள் ஜுமுஆவின் காரணத்தால் இன்னும் முக்கியத்துவம் வாய்ந்ததாகி விட்டது. துஆ செய்தவாறு, அல்லாஹ்வின் முன் குனிந்தவாறு இரவையும் வணக்கத்தால் உயிரூட்டியவாறு புது வருடத்தை வரவேற்பவராக ஒரு மூஃமின் இருப்பார். அதே வேளையில் ஒரு மூஃமின் அல்லாதவருக்கு ஜுமுஆவின் முக்கியத்துவம் குறித்து எதுவும் தெரியாது. மேலும் புது வருடத்தை எப்படி வரவேற்க வேண்டும் என்றும் தெரியாது. அவர்களின் நோக்கமெல்லாம் கழிந்த வருடத்தின இறுதி இரவு புது வருடத்தின் தொடக்க இரவு மிகவும் கேளிக்கை உற்சாகத்துடன் கழிய வேண்டும் என்பது மட்டும்தான். மதுக்கோப்பைகளுடன் அந்த இரவை கழிக்க வேண்டும்.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தினர் நற்பேறு பெற்றவர்கள் ஆவர். நாம் ஒளியின் பிழம்பாக விளங்கிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஒப்புக் கொண்டவர்கள் ஆவோம். அவர்கள் நமக்கு இறை திருப்தியைப் பெறும் வழியைக் காட்டினார்கள். மனிதனுக்கு, ஒரு மூஃமினுக்கு அவரது பிறப்பின் நோக்கத்தின் பக்கம் வழிகாட்டினார்கள். அவர்கள் இறைவனின் அன்புக்குரியவர்களாக இருந்தனர். அவர்களின் சுன்னத்தை உண்மையான முறையில் பின்பற்றுபவருக்கு தனது நேசத்தை வழங்குவதாக அல்லாஹ் அறிவித்துள்ளான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

எவருடைய வழியில் நடப்பதால் இறைவனுடைய அன்பு ஒருவருக்கு கிடைக்க முடியுமோ – எவரது வழியில் நடப்பது ஒரு மனிதனை இறைநேசம் பெற்றவராக மாற்றுகிறதோ அம்மனிதனை ஒளி என்று அழைக்காமல் வேறு எவர்தான் அழைக்கப்பட உரிமை பெற்றவராக இருப்பார்? எனவேதான் அல்லாஹ் திருக்குர்ஆனில் அவர்களின் பெயர் **நூர்** என்று வைத்துள்ளான்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

**கத் ஜாஅ[க்]கும் மினல்லாஹி நூர்** – உங்களுக்கு அல்லாஹ்விடமிருந்து ஓர் ஒளி வந்துள்ளது. (5:16)

இது நம்மீதுள்ள அல்லாஹ்வின் பேருபகாரம் ஆகும். நாம் அந்த நூரின் வெளிச்சத்தில் இருந்து பங்கு பெறுபவர்களாவோம் எனில் அதற்கு மிகச்சிறந்த வழியை ஜுமுஆவுடைய நாளுடன் தொடர்புபடுத்தி அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நமக்கு துஆக்களை கற்றுத் தந்துள்ளார்கள். அதன் மூலம் நாம் ஒப்புக் கொள்ளப்பட்ட துஆக்களை உடையவர்களாகும் தகுதியைப் பெறுவோம்.

ஹஸ்ரத் அவ்ஸ் பின் அவ்ஸ் அவர்கள் அறிவிப்பதாக ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நாட்களில் சிறந்த நாள் ஜுமுஆவுடைய நாளாகும். அந்நாளில் என் மீது அதிகமான தரூது ஓதுங்கள். அந்நாளில் உங்கள் தரூதுகள் என் முன் எடுத்து வைக்கப்படுகின்றன.

இறைவன் அவர்களிடம் கூறுவான். பார்! எனது அன்பிற்குரிய முஹம்மதே(ஸல்)! உனது உம்மத்திலுள்ள மக்கள் நன்றியுடைமையில் நிறைந்தவர்களாக தமது செயல்களை குர்ஆனிய போதனை மற்றும் உமது முன்மாதிரியின்படி ஆக்க முயற்சி செய்தவாறு உன் மீது தரூது – ஸலவாத் ஓதுகின்றனர். இந்த அருளுக்குரிய நாளுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. எனவே நான் இந்த மக்களிடம் அன்பு கொண்டவாறு இவர்களின் துஆக்களை ஒப்புக் கொள்கிறேன். மேலும் உமக்கு தரூது ஓதுமாறு அம்மக்களுக்கு நான்தான் கட்டளையிட்டிருந்தேன். ஏனெனில் அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் கூட அவர் மீது தரூது அனுப்புகின்றனர். இந்த மூஃமின்கள் எனது கட்டளைக்கு செயல் வடிவம் தரும் போது எனது திருப்தி பெறுவதற்காக எனது அன்புக்குரியவர் மீது தரூது அனுப்பினர். பிறகு அந்த மக்களின் – துஆவில் மூழ்கியுள்ள அம்மக்களின் துஆவை நானும் கூட அவர்களுக்காக கேட்கவே செய்வேன்! ஒப்புக் கொள்ளவே செய்வேன்.

ஆகவே இன்று செய்யப்படும் தரூதுகளும் துஆக்களும் அல்லாஹ்வின் முன் எடுத்து வைக்கப்படும்போது அல்லாஹ்வின் அன்பை நமக்கு அருகில் கொண்டு வருவதாக இருக்கும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அனுப்பப்படும் தரூது களங்கமற்ற முறையில் அனுப்பப்படும் தரூது – ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்ட பேரன்பில் மாய்ந்தவாறு அனுப்பப்படும் தரூது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் வைக்கப்பட்ட பிறகு மீண்டும் இறைவன் முன்னால் எடுத்து வைக்கப்படுகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், (தாம்) மஹ்தி மஸீஹாக இருப்பதாக வாதம் செய்துள்ளார்கள். காலத்தின் இமாமாகும் தகுதியைப் பெற்றார்கள். இவை அனைத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்ட உண்மையான பேரன்பு மற்றும் தரூது –ன் காரணத்தால் கிடைத்தவையாகும். பிறகு அந்த ஒளியின் தூண் வானிலிருந்து பூமிக்கு வரத்தொடங்கியது. இதே அறிவுரையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு வழங்கியுள்ளார்கள். அவர்களிடம் பைஅத் செய்துள்ள நாம் அதனை செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நீங்கள் என்னிடம் பைஅத் செய்துள்ளதாக கூறுவீர்கள் எனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு இருப்பதாக வாதிப்பீர்கள் எனில் களங்கமற்ற முறையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது தரூது அனுப்புங்கள். பிறகு உங்கள் தகுதிக்கேற்ப நீங்களும் அந்த நூரிலிருந்து பங்கு பெறுவீர்கள். அது அல்லாஹ்வின் நூர் ஆகும். பிறகு இதுவே உங்கள் உலகத்தையும் பெற்றுத் தரும். மறுமையையும் பெற்றுத் தரும்.

ஹதீஸிலிருந்து இந்த ஜுமுஆ நாளின் முக்கியத்துவம் குறித்து இன்னொரு விஷயமும் தெரிய வருகிறது. முஸ்லிம் ஹதீஸ் தொகுப்பில் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

சூரியன் உதிக்கும் நாள்களின் சிறந்த நாள் வெள்ளிக்கிழமையாகும். இந்நாளில் தான் ஆதம் படைக்கப்பட்டார். இந்த நாளில் தான் ஜன்னத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டார். இதே நாளில் தான் ஜன்னத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். எனவே இந்த நாளில் இவ்வாறு பரக்கத்துகளை நெருங்குவதற்கு பல சம்பவங்கள் நமக்கு முன்னுதாரணமாக உள்ளன. ஆதமுடைய சந்ததிகள் தாம் எந்த கூட்டத்தில் இணைய வேண்டும் என்பதை அவர்களே முடிவு செய்ய வேண்டும்.

எனவே இந்த நாளின் அருளை நெருங்குவதற்கு துஆ, தரூது நற்செயல்கள் தேவை. அவை நம்மை ஜன்னத்தில் இணைவதற்கு காரணமாக அமையும். அதுவே அல்லாஹ்வின் ஒளியிலிருந்து பங்கு பெறுபவராக்கும். ஷய்த்தானின் பிடியில் மாட்டிக் கொண்டால் இது பரக்கத்திற்குரிய நாளாக இருந்தபோதிலும்

ஆதம் ஜன்னத்திலிருந்து வெளியேற வேண்டியது ஏற்பட்டது போன்று ஆதமின் மக்களுக்கும் ஏற்படும். நற்செயல்களின் பக்கம் கவனம் இருக்கும் எனில், துஆ தரூதின் பக்கம் கவனம் இருக்கும் எனில், ஜன்னத்தின் பக்கம் அடியெடுத்து வைக்கத் தொடங்கியிருப்போம். இந்த உலகமும் ஜன்னத்தாகி விடும். மறு உலகிலும் ஜன்னத்திற்கான நற்செய்தியை அல்லாஹ் தருகிறான். மனிதன் பாவத்தினால் பீடிக்கப்பட்டால் பிறகு அல்லாஹ் ஜன்னத்திலிருந்து வெளியேறுவதற்கான செய்தியை தந்து விடுவான். பிறகு இவ்வுலகும் நரகமாகி விடும். ஆகவே இந்நாளின் முக்கியத்துவம் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அஃமாலே சாலிஹாவின் நிபந்தனைக்குட்பட்டதாகும். ஆயிரக்கணக்கான தரூதுகள் அந்த பேருபகாரியின் மீது உண்டாகட்டும்! அவர் ஆதமின் மக்களுக்கு இவ்வுலக மற்றும் மறு உலக ஜன்னத்திற்கான வழியைக் காட்டினார்.

நான் ஹதீஸை எடுத்து வைத்து விளக்கும் போது கூறியது போன்று களங்கமற்ற முறையில் செய்யப்பட்ட துஆ தரூது இந்த ஜன்னத்துகளுக்கு வாரிசாக்குகிறது. அந்த ஜன்னத்தை அல்லாஹ் இவ்வுலகிலும் மறுமையிலும் வைத்துள்ளான். ஜன்னத்திற்குள் நுழைவதும் அதிலிருந்து வெளியேறி விடுவதும் அமல்களைப் பொறுத்ததாகும். உலகம் மற்றும் மறுமையின் ஜன்னத் குறித்து திருக்குர்ஆனில் இவ்வாறு வருகிறது.

**வலிமன் [kh]ஹாஃப ம[க்]காம ர[b]ப்பிஹீ ஜன்ன[த்]தான்** – **ஆனால் தமது இறைவனின் உன்னத தோற்றத்திற்கு அஞ்சி நிற்போருக்கு (இவ்வுலகிலும் மறு உலகிலும்) இரு தோட்டங்கள் உள்ளன. (55:47)**

இவ்வுலகிலும் மறு உலகிலும் ஜன்னத்துகள் உள்ளன.

**<u>ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது குறித்து கூறுகின்றார்கள்:</u>**

எந்த மனிதன் இறைவனுடன் அந்தஸ்து அவனது மகிமை குறித்து பயந்தவாறு – ஒரு நாள் நாம் அவனால் விசாரிக்கப்படுவோம் என்ற அச்சத்தால் பாவத்தை விடுவார் எனில் அவருக்கு இரண்டு சொர்க்கங்கள் வழங்கப்படுகின்றது. ஒன்று இவ்வுலகில் கிடைக்கிறது. அம்மனிதரிடம் தூய மாற்றம் ஏற்படுகிறது. இறைவன் அவரது பொறுப்பாளன் ஆகிவிடுகின்றான். இரண்டாவது நிரந்தரமான ஒரு சொர்க்கம் அவருக்கு வழங்கப்படுகிறது. அம்மனிதன் தனது நஃப்ஸின் தீய விருப்பங்களின் மீது இறையச்சத்திற்கு முதன்மை வழங்கினார்.

ஜுமுஆவில் தனது நெருக்கத்திற்கான வாய்ப்பை அல்லாஹ் அதிகமாக வழங்குகிறான். அதிலிருந்து முழுமையாக பயனடைபவரே உண்மையான மூஃமின் ஆவார்.

இன்று நமக்கு அந்த வாய்ப்பை தந்துள்ளான். புதிய வருடத்தின் முதல் நாளே அதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளான். இதில் அவன் முன் குனிந்து துஆவின் ஒப்புக் கொள்ளப்படும் காட்சியை கண்டு கொண்டே செல்லுங்கள். தமக்காகவும், தமது குடும்பத்தினருக்காகவும் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்திற்காக தியாகம் செய்பவர்களுக்காகவும் ஜமாஅத்திற்காகவும் அவர்கள் வாழ்கின்ற சுற்றுப்புறம் மற்றும் சமுதாயத்திற்காகவும் நாட்டிற்காகவும் ஒரு மூஃமின் துஆ செய்யும் போதுதான் உண்மையான மூஃமின் என்று அழைக்கப்படுகிறார். அவர் எந்த நாட்டில் வாழுகின்றாரோ எந்த நகரத்தில் இருக்கிறாரோ அவற்றிற்காக துஆ செய்யும் பொறுப்பு ஓர் அஹ்மதிக்கு தரப்பட்டுள்ளது. அதனை நிறைவேற்றுவது மிகவும் அவசியமாகும்.

அஹ்மதிகளின் துஆவில்தான் மனித குலத்தின் நிலைப்பு உள்ளது. ஜன்னத்தின் வழிகாட்டல் உள்ளது. ஒருவர் தானே அந்த வழியில் செல்லவில்லை எனில் மற்றவருக்கு என்ன வழிகாட்டுவார்?

நாம் அஹ்மதிகள். இக்காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் ஆவோம். அந்த இமாம் ஜன்னத்திலிருந்து நம்மை வெளியேற்றுவதற்காக வரவில்லை. அவர்கள் ஜன்னத்தில் நம்மை சேர்ப்பதற்காக மட்டும் வரவில்லை. மாறாக ஒரு போதனையுடன் வந்துள்ளார். அப்போதனை அவர்களது எஜமானரும் தலைவரும் ஆகிய ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த போதனையாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் இல்ஹாமில் கூறினான்.**

அவன் இந்த ஆதமைப் படைத்தான். அவருக்கு கண்ணியம் வழங்கினான். இவர் அல்லாஹ்வின் தூதர். இவர் எல்லா நபியையும் பின்பற்றி வந்தவராக இருப்பார். அதாவது எல்லா வகையான சிறப்பு பண்புகளும் – நபிமார்களிடம் காணப்பட்ட சிறப்புப் பண்புகளும் ஒருங்கமையப் பெற்றவராக இவர் வந்துள்ளார். எனது அஹ்மதே உமக்கு நற்செய்தி!

''அல்லாஹ்வின் வீரர் நபிமார்களின் உடையில்'' என்ற (இல்ஹாமிய) வாசகத்திற்கு விளக்கம் அளித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:

இந்த இறை வஹியின் பொருள் என்னவென்றால், ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் முதல் கடைசி வரை எவ்வளவு நபிமார்கள் (அலைஹிமுஸ்ஸலாம்) உலகில் வந்துள்ளார்களோ அவர்கள் இஸ்ராயீல் நபியாக இருந்தாலும் சரி, இஸ்ராயீல் அல்லாத நபியாக இருந்தாலும் சரி, அந்த நபிமார்களிடம் அமைந்திருந்த சிறப்பான பண்புகள் அல்லது சம்பவங்களிலிருந்து இந்த எளியவனுக்கு பங்கு தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு நபியின் இயல்பின் முக்கிய அம்சங்கள் எனது இயல்பில் உள்ளன.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நிழலாக – நிழல் நபி என்ற கண்ணியம் பெற்றவர்களாக அவர்களின் ஒளியிலிருந்து பங்கு பெற்றவாறு வந்துள்ளார்கள். அவர்கள் பெற்ற அவ்வொளி எல்லையற்றது. இக்காலத்தில் வந்த அந்த ஆதம் முஹம்மதின் ஒளியால் நிரப்பப்பட்டவர்களாவர். எனவே வெளிச்சத்தின் புதுப்பாதையைக் காட்டினார்கள். துஆவின் வழியை நமக்கு கற்பித்தார்கள். உலகம் மற்றும் மறுமையின் நன்மைகளை பெறுவதன் பக்கம் நமக்கு வழிகாட்டினார்கள். அதன் மூலம் நாம் உலகம், மறுமை இரண்டின் ஜன்னத்திற்கும் நிரந்தரமான வாரிசாக ஆகிவிடுவோம்.

எனவே இந்த ஒளியில் பங்கு பெறுவதற்காக இந்த வருடத்தின் முதல் நாளில் மட்டுமல்ல. ஒவ்வொரு நாளையும் அருளுக்குரியதாக்குவதற்கு துஆ மற்றும் அஃமாலே சாலிஹா தேவை. அதன் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும். இந்த வருடத்தின் இந்த முதல் நாளை அஹ்மதிகள் இந்த உணர்வோடு கழிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். சில பள்ளிகளில் இன்று ஜமாஅத்துடன் தஹஜ்ஜுத் தொழுவதற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த உணர்வு முதல் நாளுடன் தீர்ந்து விடக்கூடாது. இதன் தாக்கத்தை எப்போதும் வெளிப்படுத்துபவர்களாக ஆகிக் கொண்டே செல்ல வேண்டும். நமது ஒவ்வொரு அடியும் தக்வாவின் பக்கம் முன்னேறுவதாக இருக்க வேண்டும். உறுதியான ஈமானில் மூழ்கிவிடுபவராக இருக்க வேண்டும்.

இது தொடர்பாக முதல் நாளில் செய்யப்பட்ட முயற்சி வருடத்தின் 365 நாளிலும் பிரதிபலிக்க வேண்டும்.

**திருக்குர்ஆனில் ஓரிடத்தில் அல்லாஹ் கூறுகிறான்:**

அந்த வசனத்தை நான் ஓதினேன். அதன் பொருள், **நம்பிக்கை கொண்டவர்களே அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அவனது ரஸூலின் மீது ஈமான் கொள்ளுங்கள். அவன் தனது ரஹ்மத்திலிருந்து இரு பங்கை அளித்து உங்களுக்கு ஓர் ஒளியை வழுங்குவான். அவன் உதவியால் நீங்கள் நடப்பீர்கள். மேலும் அவன் உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனும் ஆவான் (57:29)**

இதுவே ஒரு மூஃமினின் அடையாளம்; அந்தஸ்து ஆகும். ஆதம் மற்றும் ஆதமுடைய மக்களின் பாவங்களுக்கு ஒரு மனிதனின் சபிக்கப்பட்ட மரணம் பரிகாரமாகி விடும் என்று ஒரு மூஃமின் நம்புவதில்லை.

மாறாக, ஒரு உண்மையான மூஃமினுக்காக அல்லாஹ் கூறுகிறான்: உங்கள் வாழ்க்கை முழுவதும் தொடர்ச்சியான முயற்சி இருந்து கொண்டிருக்க வேண்டும். தொடர்ந்து தியாகம் செய்து கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ்வின் மீது தக்வாவை மேற்கொள்ள வேண்டும். அதில் நிலைத்து நிற்க வேண்டும். அடியார்களின் கடமையை நிறைவேற்றுவது மிகவும் அவசியமாகும். அதைப்போன்று அல்லாஹ்வுக்குரிய கடமையை நிறைவேற்றுவதும் அவசியமாகும். ஆன்மீக முன்னேற்றத்தை தான் பெறுவதுடன் கூடவே தமது

சமுதாயத்தை பாவத்திலிருந்து மீட்பதற்காக தொடர்ந்து முயற்சி செய்வது அவசியமாகும். உலகிற்கு புரிய வைக்க வேண்டும். புது வருடத்தை போதையில் மூழ்கியவாறு கேளிக்கைகளில் ஈடுபட்டவாறு வரவேற்கக் கூடாது என்பதை புரிய வைக்க வேண்டும். மாறாக தூய உள்ளத்துடன் அல்லாஹ்வின் முன் வந்து விடுவதன் மூலமே புது வருடத்தை வரவேற்க வேண்டும். தப்வா, இஸ்திக்ஃபாருடன் செய்ய வேண்டும். அதன் மூலம் அல்லாஹ் இவ்வுலகத்தின் நெருப்பிலிருந்தும் ஆகிரத்தின் நெருப்பிலிருந்தும் பாதுகாப்பான். ஒவ்வொருவரும் தாம் செய்த செயலுக்கு தாமே பதில் சொல்ல வேண்டும். எவரும் யாருக்கும் பாவப்பரிகாரமாக ஆக முடியாது. எனவே நற்செயல்களே இவ்வுலகத்தில் நன்மைகளையும் ஆகிரத்தின் நன்மைகளைப் பெறுவதற்கு காரணமாக அமைகின்றன. எனவே அல்லாஹ்வின் ரஸுலுக்கு முழுமையாக கட்டுப்படுவதே தக்வாவாகும். அல்லாஹ்வின் ரஹ்மத்தை அது ஈர்த்துக் கொண்டு வருகிறது. ஏற்கனவே கூறப்பட்டது போன்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்றுவது ஒரு மனிதனை இறைவனின் அன்பை பெறுபவனாக ஆக்குகிறது. பிறகு அம்மனிதனுக்கு இரு பங்கு கூலி தருகிறது. ஓர் ஒளியை அவருக்கு வழங்கி விடுகிறது. அந்த இரு பங்கு என்பது இவ்வுலகின் நற்பயனும் ஆகிரத்தின் நற்பயனும் ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது பற்றி கூறுகின்றார்கள்:**

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் இறையச்சம் கொண்டவராவதற்காக உறுதி கொள்வீர்கள் எனில், இறையச்சம் பாவத்திலிருந்து தப்பித்தல் என்ற அப்பண்பில் உறுதியாக நிலைத்திருங்கள். அப்போது இறைவன் உங்களுக்கும் மற்றவருக்கும் இடையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துவான். அந்த வித்தியாசம் உங்களுக்கு ஓர் ஒளி வழங்கப்படுவதாகும். அந்த ஒளியுடன் நீங்கள் பாதையைக் கடப்பீர்கள். ஏனெனில் அந்த ஒளி, உங்கள் சொற்கள், செயல்கள், விருப்பம், புலன்கள் ஆகியவற்றிலும் பிரதிபலிக்கும். உங்கள் சிந்தனை ஒளியாக இருக்கும். உங்கள் கண்களும் ஒளியாக இருக்கும். உங்கள் காதுகள், நாவுகள், பேச்சுகளும் ஒளியாகிவிடும். உங்கள் ஒவ்வொருஅசைவும் அமைதியும் ஒளியாகி விடும். நீங்கள் செல்லும் பாதை ஒளியின் பாதை ஆகிவிடும். சுருக்கமாக, உங்களது புலன்களின் வழிகள் எல்லாம் ஒளியால் நிரப்பப்படும். நீங்கள் ஒளியின் பிழம்பினுள் செல்வீர்கள். தக்வாவுடன் அறிவீனம் ஒன்றுசேர முடியாது. ஆம், ஒருவரின் புரியும் திறன் தகுதிக்கேற்ப கூடுதலாகவோ குறைவாகவோ இருக்காலம். தக்வா பற்றி அறிவு அல்லாஹ்வுடன் அவருக்குள்ள தொடர்பிற்கேற்ப கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கலாம். ஆனால் அறிவீனமும் தக்வாவும் ஒன்றுசேர முடியாது. தக்வாவுக்கு பல படித்தரங்கள் உள்ளன. எனவே மனிதனுக்கு தக்வாவின் படித்தரங்களை அடைந்து கொண்டே செல்லுமாறு கூறப்பட்டுள்ளது.

ஒருவர் நல்ல படித்த அஹ்மதியாக இருக்கலாம். அல்லது குறைவாக படித்தவராக இருக்கலாம். நல்ல மார்க்க அறிவு உள்ளவராக இருக்கலாம். அல்லது குறைந்த மார்க்க அறிவு உள்ளவராக இருக்கலாம். தக்வாவுடன் இருப்பார் எனில் அறிவீனமான செயல்களிலிருந்து எப்போதும் தப்பித்து விடுவார். இந்த முக்கிய கருத்தை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அறிவீனமும் தக்வாவும் ஒன்றுசேர முடியாது. நான் ஏற்கனவே கூறியது போன்று தக்வாவின் படித்தரம் சற்று கூடுதல் குறைவாக இருக்கலாம். ஆனால் உண்மையான மூஃமின் என்பவர் தக்வாவை முன் நிறுத்தி தனது செயல்களை செய்வதற்கு முயற்சி செய்வார். இந்த துஆவுடன் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு வருடத்திலும் நுழைவார் எனில், அல்லாஹ் நம்மை எப்போதும் தக்வாவில் நிலைநிறுத்துவான். மார்க்கம் மற்றும் உலக நற்பலன்களில் இருந்து அருள் புரிந்து கொண்டே இருப்பான்.

மனிதனுக்கு அவரது அமல்தான் நற்பலன்களை பெற்றுத் தருகின்றன. அல்லாஹ்வுடைய திருப்திக்கு அவனை உட்படுத்துகின்றன. அல்லது அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாக்குகின்றன.

**அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகின்றான்:**

**வலா [த்]தஸிரு வாஸிர[த்]துவ் விஸ்ர உ[kh]க்ரா** – சுமை சுமைக்கும் ஒருவன் மற்றவரின் சுமையை சுமக்கமாட்டான். (35:19)

எனவே அல்லாஹ் கூறுகின்றான்: தக்வாவின் மீது நிலைத்திருப்பவர்களுக்கு அல்லாஹ் இரு பங்கு கூலி தருவான். அவர்கள் அல்லாஹ்வின் ரஸுலின்மீது நம்பிக்கை கொள்கின்றனர். இறை திருப்தியைப் பெறுவதற்காக ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது தரூது அனுப்புகின்றனர். அன்னாரின் முன்மாதிரியின்படி நடக்க முயற்சி செய்கின்றனர். அவர்களுக்கு அல்லாஹ்வின் புறமிருந்து இரு பங்கு கூலிகள் கிடைக்கின்றன. அவை உலகின் நற்பலன்களாகிய உலக ஜன்னத்துகளுக்கும் வாரிசாவார்கள். மறு உலக நற்பலனாகிய மறு உலக ஜன்னத்திற்கும் வாரிசாவார்கள். இதனைப் பெறுவதற்காக அல்லாஹ் நமக்கு துஆவும் கற்றுத் தந்துள்ளான். அந்த துஆவையும் செய்ய வேண்டும். எவ்வளவுதான் இறைவனுக்கு நாம் நன்றி செலுத்தினாலும் நமது நன்றி செலுத்தும் கடமையை நிறைவு செய்திட முடியாது. எனவே அதற்கு ஒரே வழிதான். தொடர்ந்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவாறு அவன் முன் மனிதன் குனிந்து கொண்டிருக்க வேண்டும். இந்த நற்பலன்களின் இரு பங்கையும் பெறுவதற்காக அல்லாஹ் அவனுக்கு ஒரு துஆவும் கற்றுத் தந்துள்ளான். அது சூரா பக்கராவில் உள்ளது.

**வமின்ஹும் மய்யகூலு ரப்பனா ஆ[த்]தினா ஃபி[d]த்துன்யா ஹஸன[த்]தவ் வஃபில் ஆ[kh]கிரத்தி ஹஸன[த்]தவ் வ[q]கினா அஸாபன்னார்** – எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக; மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக.) எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்தும் காப்பாற்றுவாயாக என்று அவர்களுள் சிலர் வேண்டுகின்றனர். (2:202)

ஆகவே இவர்களே உண்மையான மூஃமின்கள் ஆவர். இவர்கள் உலகியல் நன்மைகளை வேண்டுகின்றனர். மறுமையின் நன்மைகளையும் வேண்டுகின்றனர். புத்தாண்டில் ஆரம்பத்தில் உலக முன்னேற்றத்தை மட்டும் கேட்பதில்லை. மாறாக, ஆன்மீக முன்னேற்றத்தையும் கேட்கின்றனர்.

தமது முன்னேற்றத்திற்காக மட்டும் துஆ கேட்பதில்லை. மாறாக, மற்றவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் குறித்தும் சிந்திக்கின்றனர். ஆகவே தக்வாவின் மீது நடக்கின்ற உண்மையான மூஃமின் உலக வெற்றிகளைத் தேடும் வேளையில் அல்லாஹ்விடம் ஆகிரத்தின் வெற்றிகளையும் பெற விரும்புவர். அதன் மூலம் நெருப்பின் தண்டனையிலிருந்து தப்பிக்கின்றனர். இது ஓர் கருத்து ஆழமிக்க துஆவாகும். இது உலகின் தற்காலிக வெற்றிகளையும் பெற்றுத் தருகிறது. நிரந்தரமான வெற்றிக்கான துஆவும் கற்றுத் தரப்பட்டுள்ளது.

அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த துஆவை அதிகமதிகமாக செய்து கொண்டிருப்பார்கள். இந்த துஆ அல்லாஹ்வின் கடமையையும் அடியாரின் கடமைகளையும் நிறைவேற்றியவாறு இவ்வுலகத்தின் நெருப்பிலிருந்து தப்பிக்கச் செய்கிறது. கடமைகளை நிறைவேற்றியதன் காரணத்தாலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அதனை செய்ததன் காரணத்தாலும் மறு உலகிலும் நெருப்பிலிருந்து பாதுகாக்கப்படுவார். இவ்வுலகிலும் கூட மனிதன் நெருப்பின் தண்டனையை கடக்க வேண்டி வருகிறது. பலவகையாக துக்கங்கள், இழப்புகள், பலவகை துன்பங்கள், யுத்தங்கள், இவை அனைத்தும் இவ்வுலகின் நெருப்புத் தண்டனைகளே ஆகும். இன்று பாருங்கள். பாகிஸ்தானிலும், ஆப்கானிஸ்தானிலும் மற்ற நாடுகளிலும் என்ன நடக்கின்றது? கடந்த சில நாட்களுக்கு முன் கராச்சியில் மூட்டப்பட்ட நெருப்பு அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அஸாபுன்னார் – நெருப்புத் தண்டனையாக இருந்தது. அதுவும் முழு நாட்டிற்கும் இது அஸாபுன்னார் ஆக இருந்தது. இந்த நெருப்பினால் முழு நாடுமே நிலை குலைந்துள்ளது. வெறும் ஒரு நகரத்தின் இழப்பல்ல. ஒரு தேசிய இழப்பாகும்.

ஆகவே நெருப்பின் தண்டனை மனிதனுக்கு இவ்வுலகிலும் கூட உள்ளது. மனிதன் அதற்காக அடைக்கலம் தேட வேண்டும். மனிதன் தக்வாவிலிருந்து வெறுமையாக இருப்பான் எனில், அல்லாஹ் மட்டும் அடியாருக்குரிய கடமைகளை நிறைவேற்றவில்லை எனில் அத்தகைய மக்களுக்கு இறைவனின் பெரும் எச்சரிக்கை உள்ளது. மனிதன் துஆ செய்யும் போது வெற்றிகளை கேட்பதுடன் தீவிரமாக தக்வாவின் பக்கம் விரைந்து செல்ல வேண்டும். அல்லாஹ் மற்றும் அடியாரின் உரிமையை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். தீய விளைவு ஏற்படுத்தும் எல்லா காரியங்களிலிருந்தும் விலகி இருக்க வேண்டும்.

ஏதாவது மறைவான பாவத்தின் காரணத்தால் இறைவனது வெற்றி நற்பலன்களிலிருந்து விலகிவிடக் கூடாதே என்ற கவனமும் இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

தவ்பா என்பது ஒரு மனிதனுக்கு பயனற்றதோ அதிகப்படியானதோ அல்ல. அதன் தாக்கம் கியாமத்தில் மட்டும் வெளிப்படும் என்பதும் அன்று. மார்க்கம் மற்றும் உலகம் இரண்டிலும் அதன் விளைவால் நிறைக்கப்படுகின்றனர்.

வரக்கூடிய காலத்தில் அதனால் அமைதியும் நிம்மதியும் கிடைக்கிறது.

பாருங்கள்! அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

**ரப்பனா ஆ[த்]தினா ஃபி[d]த்துன்யா ஹஸன[த்]தவ் வஃபில் ஆ[kh]கிரத்தி ஹஸன[த்]தவ் வ[q]கினா அஸாபன்னார்** – எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக; மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக.) எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்தும் காப்பாற்றுவாயாக (2:202).

பாருங்கள்! ரப்பனா (எங்கள் இறைவா!) என்ற சொல்லில் தவ்பாவைக் குறித்த நுட்பமான ஒரு சைகை உள்ளது. ஏனெனில் ரப்பனா என்ற சொல் விரும்புவதாவது முன்னர் உருவாக்கப்பட்ட பல ரப்புகளிடமிருந்து விழிப்புணர்வின் மூலம் இங்கு இந்த ரப்பிடம் வர வேண்டும். இந்த சொல் உண்மையான வலியை சுட்டிக் காட்டுகிறது.

ரப் என்ற சொல்லின் பொருள் படிப்படியாக முழுமையின் பக்கம் கொண்டு செல்பவன்; பரிபாலிப்பவன்.

உண்மையில் மனிதன் பல ரப் –களை உருவாக்கி வைத்துள்ளான். தமது திறமை, தந்திரம் ஆகியவற்றில் முழுமையாக நம்பிக்கை வைக்கிறான். அதுவே அவனது ரப் ஆகும். தனது அறிவு, திறமை குறித்து மனிதன் பெருமை கொண்டிருக்கிறான் எனில் அதுவே அவனது ரப் ஆகும். ஒருவன் தனது அழகு, செல்வம், பொருள் மீது பெருமை இருக்கும் எனில் அதுவே அம்மனிதனுக்கு ரப் ஆகும். இவ்வாறு ஆயிரக்கணக்கான பொருள்கள் அவனுடன் பிணைக்கப்பட்டுள்ளன. மனிதன் இவ்வனைத்தையும் விட்டு விட்டு, விழிப்புணர்வு பெற்றவனாக இணையற்ற உண்மையான ரப் –ன் முன் தலைகுனியாதவரை ரப்பனா என்ற சொல்லின் முழு உருக்கம் ஏற்பட்டு அதில் இந்த எல்லா ரப் –களும் கரைந்து போய் அந்த உண்மையான இறைவனின் முன் வீழ்ந்து விடாதவரை ரப்பனா என்ற சொல்லின் பொருளை அம்மனிதன் விளங்கவில்லை.

எனவே அந்த இறைவனின் முன் ஒருவர் தனது பாவங்களை ஒப்புக் கொண்டு தவ்பா செய்து அவனை ரப்பனா என்று அழைக்கிறான். அதாவது நீயே எனது அசல் ரப் ஆவாய். நாங்கள் தவறுதலாக மற்றவற்றின் பக்கம் சுற்றி அலைந்து விட்டோம். இப்போது நாங்கள் அந்த பொய்யான சிலைகள், பொய்யான வணக்கத்திற்குரியவற்றை விட்டு விட்டோம். உண்மையான உள்ளத்துடன் உனது ருபூபிய்யத்தை (படைத்து பரிபாலிக்கும் பண்பு) ஒப்புக் கொள்கிறோம். உனது திருமுன் வருகிறோம். சுருக்கமாக சொல்வதென்றால் இறைவனை தனது ரப் ஆக ஆக்குவது என்பது மிகவும் சிரமமான காரியமாகும். எதுவரை மனிதனிடமிருந்து மற்ற ரப் –களின் கண்ணியம் நம்பிக்கை மகத்துவம் விலகவில்லையோ அதுவரை உண்மையான ரப்பின் ருபூபிய்யத்தை தமது புகலிடமாக ஆக்க மாட்டார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சிலர் பொய்யை தமது ரப் ஆக ஆக்கியிருக்கின்றனர். பொய்யில்லாமல் தமது வாழ்வை கழிக்க இயலாது என்று அம்மனிதர் விரும்புகிறார். சிலர் லஞ்சம், ஏமாற்றுதல், திருட்டு போன்றவற்றை தமது ரப் ஆக ஆக்கியிருக்கின்றனர். இவையெல்லாம் இல்லாமல் தமது வாழ்வாதாரம் கிடைக்க முடியாது என்பது அவர்களின் கொள்கையாகும். அதை தவிர வேறு வழியே இல்லை என்று உறுதியாக நினைக்கின்றனர். இந்நிலையில் அவையே அவர்களின் ரப் –களாகும். ஒரு திருடனிடம் திருட்டுக்குத் தேவையான அனைத்தும் உள்ளன. இரவும் அவனது திருட்டுக்கு பயனுள்ள ஒரு பொருள் என்று நினைக்கிறார். எவரும் தன்னை

பார்க்கப் போவதில்லை – கடைக்காரர் விழிக்கப் போவதும் இல்லை என்று கருதுகின்றனர். திருட்டைத் தவிர வேறு வழியை சந்தித்தால் அதன் மூலமும் அவர்களுக்கு வாழ்வாதாரம் கிடைக்கலாம். ஆனால் அவர் இந்த தமது ஆயுதங்களைத்தான் தனது வணக்கத்திற்குரியவையாக கருதுகின்றனர்.

சுருக்கமாக, இம்மக்கள் தமது திறமையின் மீது நம்பிக்கை கொண்டு அல்லாஹ்விடம் துஆ செய்ய வேண்டிய அவசியம் என்னவென்று நினைக்கின்றனர். தமது திறமை, தந்திரம், வாய்ப்புகள் இவற்றை எல்லாம் நம்புகின்றனர். துஆவின் பக்கம் இவர்களது கவனம் வருவதே இல்லை. ஒருவரது எல்லா வழியும் அடைபட்டு விட்டது. இனி அவனைத் தவிர வேறு யாரும் தம்மை காப்பாற்ற இயலாது என்று எவர் கருதுகிறாரோ அவரது உள்ளத்திலிருந்து துஆ வெளிப்படுகிறது. எனவே **ரப்பனா ஆ(த்)தினா ஃபி(d)த்துன்யா ஹஸன(த்)தவ் வஃபில் ஆ(kh)கிரத்தி ஹஸன(த்)தவ் வ(q)கினா அஸாபன்னார்** – எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக; மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக.) எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்தும் காப்பாற்றுவாயாக (2:202) என்ற துஆவை செய்வது தமது உண்மையாளரை அறிந்து கொண்டவர்களின் பணியாகும். அந்த இறைவனின் முன்பாக மற்ற பொய்யான ரப்புகள் ஒன்றுமற்றவை. கியாமத்தில் கொடுக்கப்படும் நெருப்பை மட்டும் குறிக்காது. உலகிலும் ஒரு மனிதர் ஒரு நீண்ட வாழ்நாளை பெறுகிறார். ஆயிரக்கணக்கான நெருப்புகளை சந்திக்கிறார். விதவிதமான நெருப்புகள் இவ்வுலகிலும் உள்ளன என்று அனுபவசாலிகள் அறிவர். பயம், இரத்தம், பசி, பட்டினி, செயலிழப்பு, தோல்வி, இழிவு ஏற்படலாம் என்ற கணிப்பு, பலவகை துக்கங்கள், சந்ததிகள், மனைவி, பலவகை துன்பங்கள், உறவினர்களால் ஏற்படும் மன உலைச்சல் இவை அனைத்தும் நெருப்புகளேயாகும். இந்த எல்லா வகையான நெருப்பிலிருந்தும் தம்மைக் காப்பாற்றுமாறு ஒரு மூஃமின் துஆ இறைஞ்சுகிறார். நாங்கள் உனது பாதத்தை பற்றியுள்ளோம். இறைவா இந்த எல்லா நெருப்புகளையும் விட்டு எப்போதும் காப்பாற்றுவாயாக.

இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு முழுமையான விரிவான ஒரு மேற்கோள் ஆகும். இதிலிருந்து மனிதனுக்கு என்னென்ன பிரச்சனைகள் எல்லாம் வருகின்றன என்று மதிப்பிட முடிகிறது. இதனை முன் நிறுத்தி மனிதன் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் நிரந்தரமாக நம்மை இவ்வுலக மற்றும் மறுமையின் வெற்றிகளை வழங்கிக் கொண்டிருப்பானாக. உலகம் மற்றும் மறுமையின் எல்லா வகையான நெருப்பிலிருந்தும் நம்மை பாதுகாப்பானாக. நன்மையின் பக்கம் அடியெடுத்து வைக்க வாய்ப்பு தருவானாக. இவ்வருடமும் வரக்கூடிய ஒவ்வொரு வருடமும் அஹ்மதிகளுக்கும் ஜமாஅத்துக்கும் எல்லா துன்பங்கள், இழப்புகளை விட்டும் பாதுகாப்பானாக. இவ்வருடம் எல்லா வகையான வெற்றிகளையும் கொண்டு வரட்டுமாக. நாம் உண்மையான முறையில் தக்வாவில் நடந்தவாறு நாம் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடைய ஒளியிலிருந்து பங்கு பெற்றுக் கொண்டே செல்வோமாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 01.01.2010**

Translated by : **Maulavi M. NIZAMUDEEN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**